بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 11/02/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 10

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ۬ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

வரலாற்றில் மக்கா வெற்றி குறித்த குறிப்பு வரும்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது ஒரு கனவைப் பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. அந்த கனவு என்னவென்றால்; முஸ்லிம்கள் மக்காவுக்கு அருகில் சென்றபோது ஒரு பெண் நாய் குறைத்தவாறு வந்தது. மேலும் அருகில் வந்ததும் குப்புறப்படுத்து விட்டது. அதிலிருந்து பால் வழிந்தோடியது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் இந்த கனவிற்கு விளக்கமாக, அவர்களது தீமை அகன்றுவிட்டது; நன்மை நெருங்கிவிட்டது. அவர்கள் உங்களது சொந்த பந்தத்தை காரணம் காட்டி உங்களிடம் அடைக்கலம் தேடி வருவர். நீங்கள் அவர்களில் சிலரை சந்திக்க உள்ளீர்கள் என்று கூறினார்கள்.

மக்கா வெற்றிக்கு முன்பாக அபூஸுஃப்யான் அவர்கள் மர்ருஸஹ்ரான் எனும் இடத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை சந்தித்தார். அன்னார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அல்லது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது ஆலோசனையின் அடிப்படையில் அபூஸுஃப்யான் அவர்களை, முஸ்லிம்களின் படையை பார்க்க ஏதுவாக இரவில் செல்ல விடாமல் தடுத்து விட்டார்கள். அபூஸுஃப்யானுக்கு முன்பு பச்சை நிற ஆடையை உடுத்தி இருந்த ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது படை அணிவகுத்தது. அதில் முஹாஜிர்கள் மற்றும் அன்சார் ஆகியோர் கொடி ஏந்தியவாறு கலந்து கொண்டார்கள். ஓராயிரம் அன்சார் இரும்புக் கவசங்களை அணிந்திருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தனது கொடியை ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களுக்கு வழங்கியிருந்தார்கள். அவர்கள் படைக்கு முன்னே சென்று கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் அபூசுஃப்யானை கடக்கும் போது அவரை சீண்டினார்கள். அதற்கு அபூஸுஃப்யான் அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், அப்பாஸே! எனது பாதுகாப்பின் பொறுப்பு இன்று உம்முடையதாகும் என்று கூறினார். அதற்குப் பிறகு இதர கோத்திரங்கள் அங்கிருந்து கடந்து சென்றன. பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் வெளிப்பட்டார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் தனது ஒட்டகமான கஸ்வாவில் அமர்ந்திருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸைத் பின் ஹுஸைர் (ரலி) ஆகியோருக்கு இடையில் அவர்கள் இருவரிடமும் பேசிக்கொண்டே வந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூஸுஃப்யான் அவர்களிடம் இவர்கள்தான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆவார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மக்காவில் நுழையும்போது பெண்கள் குதிரைகளின் முகத்தில் துப்பட்டாவால் அடித்து அவற்றை பின்னுக்கு தள்ளிக் கொண்டிருந்ததை பார்த்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் இந்த காட்சியை கண்டதும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், ஹஸ்ஸான் பின் ஸாபித் என்ன கூறினார்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ஸான் பின் ஸாபித் அவர்களின் அந்த கவிதைகளை பாடினார்கள். அந்த கவிதைகளில், திகில் உணர்வை ஏற்படுத்தும் படை கதா என்ற இடம் வழியாக நுழையும்போது இதே போன்ற காட்சிகள் இடம்பெற்றிருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், ஹஸ்ஸான் பின் ஸாபித் எங்கிருந்து கூறினாரோ அதே வழியில் நுழைவோம் என்று கூறினார்கள். கதா என்பது அரஃபாத்தின் மற்றொரு பெயராகும்.

மக்கா வெற்றியின் தருணத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், பாதுகாப்பு வழங்கப்படுவதாக அறிவிப்பு செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அபூஸுஃப்யான் கண்ணியத்தை விரும்புகிறார் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், அபூஸுஃப்யானின் வீட்டில் நுழைபவர் பாதுகாப்பிற்குள் இருப்பார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஹுபல் சிலையை உடைக்க கட்டளையிட்ட போது ஸுபைர் பின் அவாம் (ரலி) அவர்கள் அபூஸுஃப்யான் அவர்களைப் பார்த்து, உஹது தினத்தன்று நீர் இந்த சிலை தொடர்பாக மிகவும் ஆணவத்துடன் - அது உன் மீது அருள் பொழிந்திருக்கின்றது என்று அறிவித்தீர் என நினைவூட்டினார்கள். அதற்கு அபூஸுஃப்யான் அவர்கள், தற்போது அந்த விஷயங்களை விட்டு விடுங்கள்; முஹம்மது (ஸல்) அவர்களது இறைவனைத் தவிர வேறு ஏதேனும் இறைவன் இருந்திருந்தால் இன்று நடந்தது நடந்திருக்காது என நான் புரிந்து கொண்டேன் என்றார்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மக்கா வெற்றி அன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வாளை ஏந்தியவாறு அன்னாரது தலைமாட்டில் நின்று கொண்டிருந்தார்கள்.

ஹவாஸின் போர் என்றும், அவ்தாஸ் போர் என்றும் அழைக்கப்படுகின்ற ஹுனைன் போர் ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு மக்கா வெற்றி கொள்ளப்பட்ட பிறகு நடந்தது. ஹுனைன் என்பது மக்கா மற்றும் தாயிஃபுக்கு இடையில் மக்காவிலிருந்து 30 மைல் தொலைவில் உள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். மக்கா வெற்றி கொள்ளப்பட்டதை அறிந்ததும் மாலிக் பின் அவ்ஃப் நஸ்ரி என்பவனின் தூண்டுதலுக்கிணங்க அரேபிய கோத்திரங்களின் ஒரு பெரும்படை முஸ்லிம்களுக்கு எதிராக தயாராகிவிட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் 12,000 படைவீரர்களுடன் அவர்களை எதிர்த்து புறப்பட்டார்கள். விடியற்காலையில் ஹுனைனை அடைந்தார்கள். இணைவைப்பவர்களது படை அங்கு முன்னரே பள்ளத்தாக்கில் மறைந்திருந்தது. அவர்கள் முஸ்லிம்கள் மீது திடீரென கடுமையாக தாக்குதல் நடத்தியதால் முஸ்லிம்களால் தாக்குபிடிக்க முடியாமல் சிதறி விட்டனர். அன்னாருக்கு அருகில் ஒருசில ஸஹாபிகள் மட்டுமே எஞ்சி இருந்தார்கள் என அறிவிப்புகளில் வருகின்றது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மஃவூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** (ஹுனைன் போரில்) ஒரு சமயத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு அருகில் 12 ஸஹாபிகள் மட்டுமே இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதறியவாறு

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது குதிரையின் கடிவாளத்தை பிடித்து, யா ரஸூலல்லாஹ்! இது முன்னேறிச் செல்லும் நேரமல்ல என்று கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மிக உத்வேகத்துடன், என்னுடைய சவாரியின் கடிவாளத்தை விட்டுவிடுங்கள் என்று கூறி குதிகால்தனை அடித்தவாறு முன்னேறியவாறு, நான் நிரந்தர பாதுகாப்பிற்கான வாக்குறுதி பெற்ற வாக்களிக்கப்பட்ட நபி ஆவேன். நான் பொய்யன் அல்லன். எனவே உங்களின் அம்பு எறிபவர்கள் மூவாயிரம் பேராக இருந்தாலும் 30 ஆயிரம் பேராக இருந்தாலும் எனக்கு அதைப் பற்றி எந்த கவலையுமில்லை என்று கூறியவாறு முன்னேறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய வழிகாட்டுதலின்படி ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் முஸ்லிம்களிடத்தில், சூரா பகராவின் ஸஹாபிகளே! ஹுதைபியா நாளில் மரத்தின்கீழ் பைஅத் செய்தவர்களே! இறைத்தூதர் உங்களை அழைக்கின்றார் என்று குரல் கொடுத்தார்கள். ஒரு சஹாபி கூறுகின்றார்: புதிய முஸ்லிம்களின் கோழைத்தனத்தின் காரணத்தால் எங்களது சவாரிகளும் ஓடி விட்டிருந்தன. ஆனால் அக்குரல் எனது காதுகளில் எட்டியதும், நான் உயிருள்ளவன் அல்ல; இறந்தவன் ஆவேன். மேலும் இஸ்ராஃபீலின் எக்காளம் காற்றில் எதிரொலிப்பதாக எனக்கு தோன்றியது. நான் எனது சவாரியை திருப்ப நாடினேன். ஆனால் அது கட்டுப்பாட்டை இழந்திருந்தது. நானும் எனது பல தோழர்களும் ஒட்டகங்களில் இருந்து குதித்து விட்டோம். பலர் ஒட்டகங்களின் கழுத்தை அறுத்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை நோக்கி ஓடத் தொடங்கினார்கள்.

ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) கூறுகின்றார்கள்: கொலையுண்ட ஏதேனும் ஒரு நபரைக் குறித்து ஒருவர், தாம் அந்த நபரை கொலை செய்ததாக ஆதாரத்தை சமர்ப்பித்தால் கொலையுண்டவருடைய பொருள்கள் அவருக்கு வழங்கப்படும் என்று ஹுனைன் போருக்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் அந்த கொலையுண்டவரைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் எடுத்துரைத்தேன். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்த ஒரு மனிதர், இவர் கூறுகின்ற கொலையுண்ட மனிதருடைய ஆயுதங்கள் என்னிடம் உள்ளன என்று கூறினார். அத்துடன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம், என்னிடம் உள்ள பொருள்களை என்னிடமே இருக்க விடுங்கள். அவருக்கு ஏதேனும் கொடுத்து விடுங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கு அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவ்வாறு ஒருபோதும் நிகழாது; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் குறைஷின் ஒரு கோழைக்கு பொருள்களை கொடுத்துவிட்டு, அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் சார்பாக சண்டையிடுகின்ற சிங்கங்களுள் ஒரு சிங்கத்தை விட்டுவிட மாட்டார்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ கதாதா அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் எழுந்து நின்று எனக்கு அந்த பொருட்களை வாங்கித் தந்தார்கள்.

தாயிஃப் போர் ஷவ்வால் மாதம் ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு நிகழ்ந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தாயிஃப் வாசிகளை முற்றுகையிட்டார்கள். பல்வேறு அறிவிப்புகளின் அடிப்படையில் இந்த முற்றுகையின் காலம் 10 இரவுகளிலிருந்து 40 இரவுகள் வரை இருந்தது என்று கூறப்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய சிந்தனையில் இருந்த அதே விளக்கத்தை கொடுத்தார்கள்.

தபூக் போர் ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு ரஜப் மாதம் நிகழ்ந்தது. இந்தப் போரின்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தனது அனைத்து செல்வங்களையும் - அதன் மதிப்பு நான்காயிரம் திர்ஹமாக இருந்தது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் சமர்ப்பித்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், தங்களது வீட்டினர்களுக்காக எதையாவது விட்டு வந்துள்ளீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், வீட்டில் உள்ளவர்களுக்காக அல்லாஹ்வையும் அவனது தூதரையும் விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள். ஸைத் பின் அஸ்லம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுவதை நான் கேட்டேன். அதாவது, நான் எனது செல்வத்தில் பாதியை கொண்டு வந்தேன். ஒருவேளை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை என்னால் முந்த இயலும் என்றால் அது இன்றைய தினம் தான் என்று நான் எண்ணினேன். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தனது எல்லா செல்வத்தையும் கொண்டுவந்து விட்டார்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! நான் அபூபக்ரை எவ்விதத்திலும் ஒருபோதும் முந்திச் செல்ல முடியாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு பைஅத் செய்தவர்களை பற்றி கூறுகிறார்கள்:** ஒருபுறம் எவ்வாறான மக்கள் உள்ளார்கள் என்றால், பைஅத்தை செய்துவிட்டு நாங்கள் உலகை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் அளிப்போம் என்று உறுதி அளிக்கின்றார்கள். ஆனால் உதவி ஒத்தாசைகளின் நேரத்தில் தங்களது பைகளை அழுத்திப் பிடித்துக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட பௌதீக நேசத்தால் எவரும் மார்க்க நோக்கங்களை பெறமுடியுமா? இவ்வாறான மக்களால் ஏதேனும் நன்மை கிடைக்க முடியுமா? ஒருபோதும் இல்லை; ஒருபோதும் இல்லை. பிறகு அன்னார் (அலை) கூறுகிறார்கள்: அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்; உங்களுக்கு பிடித்தமான செல்வத்தை செலவு செய்யாதவரை உங்களுடைய எந்த ஒரு நன்மையும் நன்மை ஆகாது.

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** தபூக்கில் ஓர் இரயில் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரைக் கண்டேன். அவர்கள் மூவரும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் ஸுல் பிஜாதைன் (ரலி) அவர்களை கபரில் அடக்கம் செய்து கொண்டிருந்தார்கள்.

அந்த கபரில் அடக்கம் செய்யப்படும் நபர், நானாக இருக்கக் கூடாதா! என்று ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் ஆசை கொண்டார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி ஒன்பதில் தபூக்கிலிருந்து திரும்பி வந்த பிறகு ஹஜ் செய்வதற்காக புறப்பட எண்ணினார்கள். ஆனால் ஹஜ்ஜின்போது இணைவைப்பவர்கள் ஷிர்க்கான வார்த்தைகளை கூறுகிறார்கள் என்றும், நிர்வாணமாக தவாஃப் செய்கிறார்கள் என்றும் அன்னாருக்கு கூறப்பட்டபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அவ்வருடம் ஹஜ் செய்யும் எண்ணத்தை விட்டு விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஹஜ்ஜின் தலைவராக நியமனம் செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் 300 சஹாபிகளுடன் ஹஜ்ஜுக்காக புறப்பட்டார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் குர்பானிக்காக 20 விலங்குகளை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் புறப்பட்ட பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மீது சூரா தவ்பா இறங்கியது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்து அவர்களிடம், சூரா தவ்பாவின் ஆரம்ப வசனங்களை

**எடுத்துச் செல்லுங்கள். அத்துடன், குர்பானியின் நாளில் மினாவில் மக்கள் குழுமி இருக்கும்போது, சொர்க்கத்தில் எந்த காஃபிரும் நுழைய மாட்டார். இவ்வருடத்திற்கு பிறகு எந்த இணைவைப்பவருக்கும் ஹஜ் செய்வதற்கான அனுமதி கிடையாது. அதேபோல், நிர்வாணமாக பைத்துல்லாஹ்வை வலம் வருவதற்கும் அனுமதி கிடையாது. எவருடனாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் உடன்படிக்கை செய்திருந்தால் அந்த காலகட்டம் பூர்த்தி செய்யப்படும் என்று அறிவிக்குமாறு கூறினார்கள்.**

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சந்தித்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், தாங்கள் அமீராக நியமிக்கப்பட்டுள்ளீர்களா? அல்லது எனக்கு கீழே இருப்பீர்களா? என்று கேட்டார்கள்.**

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* **இது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது தன்னடக்கத்தின் உச்சம் ஆகும்.**

**நான் தங்களுக்கு கீழே இருப்பேன் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அரஃபாவில் மக்களிடம் உரை நிகழ்த்தினார்கள். பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது தூதுச் செய்தியை எட்ட வையுங்கள் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சூரா பரஅத்தின் (அதாவது, சூரா தவ்பாவின்) 40 வசனங்களை ஓதினார்கள்.**

*ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய குறிப்பு இனிவரும் நாட்களிலும் எடுத்துரைக்கப்படும் என்று கூறியவாறு ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், அஸிஸ்டன்ட் எடிட்டர் அல்ஃபஸ்ல் ரப்வாவாக தொண்டாற்றிய மர்ஹூம் ஷேக் குர்ஷீத் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய அமத்துல் லதீஃப் குர்ஷீத் ஸாஹிபா அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து அன்னாரது ஜனாஸா காயிப் தொழுகையை தொழுவதாக அறிவித்தார்கள். ஹுஸூர் அவர்கள் மர்ஹூமாவின் பாவமன்னிப்பிற்காகவும் அந்தஸ்து உயர்வுக்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**